முச்சந்தி முரளி




" நீதிமன்றம் குற்றம் சொன்னாலும் அதை உவர் ரணிலார் காதுகுடுத்து கேக்க வேணுமே"


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 271

வெள்ளிக்கிழமை
23 ஒகஸ்ட் 2024

ஆவணி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


# மனித உரிமைக் குற்றங்களில் ஈடுபட்டோரைப் பதவிநீக்குக!

## மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம்

கொழும்பு, ஓக. 23

இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களை நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சிறப்பு அறிக்கையொன்றை

11

# உள்ளூராட்சித் தேர்தலை பிற்போட்டது குற்றமே!

## அடிப்படை உரிமைகளை மீறினார் ரணில்

## உயர்நீதிமன்றம் நேற்று பரபரப்புத் தீர்ப்பு

**கொழும்பு, ஒகஸ்ட் 23**

**உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்பட்ட விடயத்தில், நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளார் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அத்துடன், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களும் அடிப்படை உரிமை மீறலில் ஈடுபட்டுள்ளனர் என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.**

11

## சிந்துஜாவின் இறப்பு மருத்துவர் நீக்கம்!

மன்னார், ஓக. 23

மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட மரியராஜ் சிந்துஜா என்ற இளம் குடும்பப் பெண், மருத்துவக் கவனயீனத்தால் உயிரிழந்த நிலையில் இந்த இறப்புக்குக் காரணமான மருத்துவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் அஸாத் எம்.ஹனீபா தெரிவித்துள்ளார்.

இந்த இறப்புத் தொடர்பான விசாரணைகளுக்கு அமைய நால்வர் ஏற்கனவே பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது குறித்த மருத்துவருக்கும் பணியிடை நீக்கம் தொடர்பான கடிதம் அனுப்பி வைக்கப்

11

## தேர்தலைப் பிற்போட்டதால் கொஞ்சமும் கவலையில்லை


### பொருளாதார மீட்சியே தேவை

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 23

உள்ளூராட்சித் தேர்தலை உரிய காலப்பகுதிக்குள் நடத்த முடியாமற்போனமை குறித்து நான் கவலையடையவில்லை. ஏனெனில் வாக்குரிமையைப்

11



## ஜனாதிபதி வேட்பாளர் இல்லியாஸ் காலமானார்

கொழும்பு, ஓக. 23

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மருத்துவர் ஐதுரூஸ் இல்லியாஸ் நேற்று வியாழக்கிழமை காலமானார்.

(அ-ம)

## காய்ச்சலால் பாலகி பலி!

யாழ்., ஓக. 23

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பச்சிளம் குழந்தை சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளது. பிறேமநாத் நிகாரிகா என்ற ஒரு வயதுக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த 20ஆம் திகதி காய்ச்சலையடுத்து குழந்தைக்கு பனடோல் பாணியை வழங்கிய அதன் பெற்றோர், காய்ச்சல் குறைவடையாததையடுத்து மறுநாள்

11

## நெல்லியடியில் வாள்வெட்டு ஒருவருக்குப் படுகாயங்கள்!

யாழ்ப்பாணம், ஓக. 23

வடமராட்சி – நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் முன்பாக இயங்கிவரும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு நடந்த வாள்வெட்டுத் தாக்குதலில், எரிபொருள் நிலைய ஊழியர்

11

### அரச ஊழியர்களுக்கு

## 24% ஊதிய அதிகரிப்பு; அமைச்சரவை ஒப்புதல்!

### ஓய்வூதியம் பெறுவோருக்கும் ரூ.12,000 வாழ்க்கைச்செலவு

விரிவு :- பக். 11

## ஜனாதிபதித் தேர்தலில் வென்றால் ஐ.எம்.எப். உடன்படிக்கை மாற்றம்!



கொழும்பு, ஓக. 23

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் மாற்றங்களை மேற்கொள்வேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மீண்டும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை இப்போது கொண்டிருக்கும் உடன்படிக்கை பொருளாதார வளர்ச்சி

11

## தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவு சிறீதரன் எம்.பி. நேற்றிரவு அறிவிப்பு!

கிளிநொச்சி, ஓக. 23

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரான அரியநேந்திரனுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக, தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிறீதரன் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் எவரை ஆதரிப்பது அல்லது என்ன நிலைப்பாட்டை மேற்கொள்வது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்னமும் தீர்மானிக்காத நிலையில், "கட்சி என்ன முடிவெடுத்

11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில்–ராஜபக்சக்களுக்கு நாம் முடிவு கட்டுவோம்!

## மக்கள் போராட்ட முன்னணி அழைப்பு

கொழும்பு, ஒக. 23

**தமிழ் - சிங்கள மக்களை ஒன்றிணைய விடாது இனவாதத்தைக் கக்கி வரும் ரணில் ராஜபக்ச அரசாங்கத்துக்கு முடிவு கட்டுவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று மக்கள் போராட்ட முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.**

மக்கள் போராட்ட முன்னணி தனது முதலாவது தேர்தல் பரப்புரை நடவடிக்கையை யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பித்தது.

இதன்போது, மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவான் கோபகே வடக்கு மக்களையும் தெற்கு மக்களையும் இணைக்கும் பாலமாகச் செயற்படுவதுடன் தமிழ் மக்களின் நீடித்த இனப்பிரச்சினைக்கான தீர்வை சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் வேட்பாளராக களமிறங்கியுள்ளார்.

70 வருட காலமாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் இனவாதத்தைத் தூண்டி தமது அரசியல் சுயலாபங்களை மேற்கொண்டனவேதவிர தமிழ்-சிங்கள உறவை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

இனவாதத்தைக் கக்கி வரும் அரசாங்கத்துக்கு முடிவுகட்ட தமிழ் மக்கள் எம்மை ஆதரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. (ச-20)

# ரணிலின் சதியாலேயே கோத்தா விரட்டியடிப்பு!

## ஐ.ம. சக்தி உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.22

முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை பதவியிலிருந்து விலக்குவதற்கும், அரகலய போராட்டத்தைத் தூண்டுவதற்குமான சதித் திட்டங்களை மேற்கொண்ட பிரதான சூத்திரதாரி ரணில் விக்கிரமசிங்கவே.

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாலக்க படகேவா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை நாட்டு மக்கள் விரட்டும் நிலையை உருவாக்கியது ரணில் தான். நாட்டைப் பொறுப்பேற்க கோத்தா பயவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நான்கு நிபந்தனைகளை முன்வைத்திருந்தார்.

அதில் ஜனாதிபதிப் பதவியிலிருந்து நீங்க வேண்டும், 2 வாரத்துக்குள் சகல கட்சிகளின் ஒத்துழைப்புடன் 19 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கவேண்டும், மக்களின் வாழ்க் கைத்தரத்தை உயர்த்தும் நோக்கிலான நிதி நிலைமைகளை உறுதிப்படுத்தும் வகையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். அதனை ஏற்க மறுத்த கோத்தபாய எந்தவித நிபந்தனைகளும் விதிக்காத ரணிலிடம் பதவியைக் கையளித்தார். அவர் பதவிக்கு வந்த பின்பும் நாடு முன்னேற்றத்தைச் சந்திக்கவில்லை - என்றார். (ச-25,சி)

# தேர்தல் பணிகளுக்காக ரூ. 1600 மில்லியன் தேவை

## பொலிஸ் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 23

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள பொலிஸாருக்கான செலவீனம் 1600 மில்லியன் ரூபா எனப் பொலிஸ் திணைக்களம் தேர்தல் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது.

வேட்பாளர்களின் பாதுகாப்பு, அரச அச்சகத்துக்கான பாதுகாப்பு, வாக்குச்சாவடிகளின் பாதுகாப்பு, தேர்தல் அதிகாரிகளின் பாதுகாப்பு போன்ற இன்னோரன்ன செலவீனங்களுக்காக மொத்தம் 1600 மில்லியன் ரூபா தேவை என்றும் பொலிஸ் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-6)

# எஸ். பி. நாவின்ன ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 24

நாட்டின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக முன்னைநாள் அமைச்சர் எஸ். பி.நாவின்ன 4 வருடங்களின் பின் அரசியலில் களமிறங்கியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே இந்த நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்க பொருத்தமானவர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் பின்னர் கடந்த இரண்டு வருடங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்காக ஆற்றிய பணிகள் அளப்பரியது. நாட்டுக்காக அவர் ஆற்றிய பணிகளை அனைத்துப் பிரஜைகளும் மறந்துவிடக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-சி)

# பெரமுன கதவடைப்பு

கொழும்பு, ஓக. 23

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த உறுப்பினர்களுக்கு தமது கட்சியில் இனி இடமளிக்கப்போவதில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் அறிவித்துள்ளார்.

எமது அணியிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் உள்ளே எடுக்கமாட்டோம். நாமல் ஜனாதிபதியானதும், புதிய இளைஞர்களுடன் அவர் பயணிப்பார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# பொலிஸார் போதாது

கொழும்பு, ஓக. 23

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தேர்தல் கடமையில் ஈடுபடுத்துவதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை போதாமலிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேலதிகமாக தேவைப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பொலிஸ் உத்தியோகத்தர்கள் கணிசமானோர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளமையாலும், அங்கவீனமடைந்திருப்பதனாலுமே இந்த ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

# கட்சித் தாவல்களுக்கு நடவடிக்கை இல்லையா?

## ஆங்கில ஊடகம் கேள்வி

கொழும்பு, ஓக. 23

கட்சி தாவிய உறுப்பினர்கள் மீது தேர்தல் திணைக்களம் தனது அதிகாரத்தை ஏன் பாவிக்கவில்லை என்று ஆங்கில ஊடகமொன்று கேள்வியை முடிபியுள்ளது.

வரலாற்றில் என்றுமில்லாதளவு கட்சித்தாவல்கள் இம்முறை ஜனாதிபதி தேர்தலின்போது இடம்பெற்றுள்ளன. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக அரசியல் கட்சிகளின் யாப்புகள் இலங்கையின் அரசமைப்புடன் ஒத்துப்போகின்றதா என ஆய்வு செய்யப்பட்டதா? ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டும் கட்சிக்கட்டுப்பாட்டை மீறிய உறுப்பினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருந்தது.

கட்சி தாவிய ஏனைய உறுப்பினர்கள் மீது தேர்தல் திணைக்களம் தனது அதிகாரத்தை ஏன் பாவிக்கவில்லை என்றும் அந்த ஆங்கில ஊடகம் கேள்வி எழுப்பினார். (ச-6)

# ஐ.ம.சக்தியிலிருந்து மேலும் மூவர் ரணில் பக்கம்

கொழும்பு, ஓக. 23

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாக ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் 3 அமைப்புகள் முடிவெடுத்துள்ளன.

அதற்கமைய ஐக்கிய மக்கள் சக்தியில் யாழ்.மாவட்ட அமைப்பாளர் விக்டர் ஸ்டான்லி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பரப்புரைச் செயலர் மூபீன் மற்றும் ஸ்ரீ ரெலோ அமைப்பின் தலைவர் ப. உதயராஜா ஆகியோரே ஜனாதிபதியுடன் இணைந்துள்ளனர். (ச-சி)

# யாழ்ப்பாணப் பல்கலையின் பொன்விழாவில் பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழாக் கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக, பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவை மலர்த்துதல் நிகழ்வு, எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

கலைப்பீடமும், தமிழ்த்துறையும் இணைந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 29ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிமுதல் இந்த நிகழ்வை முன்னெடுக்கவுள்ளது.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரையை 'தென்னிந்தியா - யாழ்ப்பாணம் கல்விசார் ஊடாட்டம்' எனும் விடயப்பொருளில் பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழியல் நூலகத்தின் ஏற்பாட்டில், 'வித்தியானந்தன் நூலக முகிழ்ப்பின் வரலாறு' என்ற தொனிப்பொருளில் ஆவணப்படம் காட்சிப்படுத்தலும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் வித்தியானந்தன் நாடகமும் ஆற்றுகை செய்யப்படவுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்கத் தூதுவருடன் சிறீதரன் எம்.பி. சந்திப்பு



கொழும்பு, ஓக. 23
இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் சாண்டில் எட்வின் ஷால்க், துணைத் தூதுவர் றெனி எவர்சன் வர்ணி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள தென்னாபிரிக்கத் தூதரகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

இதன்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்மக்களின் நிலைப்பாடு மற்றும் தமிழ்ப் பொதுவேட்பாளர் குறித்த சாதகத் தன்மைகள் குறித்தும், ஈழத்தமிழர்கள் சார்ந்த அரசியல் முன்னெடுப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது, காஸாவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் (ICC) வழக்குத் தாக்கல் செய்துள்ள தென்னாபிரிக்கா, ஈழத்தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலைக்கும் சர்வதேச நீதியைப் பெற்றுத்தர முயற்சிக்கவேண்டும் என்றும், அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொட ரிலும் இதுவிடயம் சார்ந்து தங்களின் கரிசனையை வெளிப்படுத்தவேண்டும் என்றும் தென்னாபிரிக்கத் தூதுவரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கை விடுத்தார். (ச-26,113)




# ஆன்மீக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக. 22
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாக் காலத்தில் நல்லூரிலுள்ள சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் ஆதீன வளாகத்தில் நடைபெற்று வரும் ஆன்மீக அருளுரை பெருந்திருவிழாவின் 15 ஆம் நாளான இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு சிவகுரு ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் 'அனைவரும் சமம்' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை ஆற்றவுள்ளார். (ச-100,66)

# கருத்துரை

யாழ்ப்பாணம், ஓக. 23
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஏற்பாட்டில் ஜீவகுமாரனின் கருத்துரை கலைப்பீட தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன் தலைமையில் கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் எழுத்தாளர் வி. ஜீவகுமாரன் 'நானும் என் புனை கதைகளும்' எனும் உரையினையும், தமிழியற் கழகம், தமிழ்த்துறை பெரும்பொருளாளர் த. அஜந்த குமார் உரையாளர் அறிமுகத்தையும் நிகழ்த்தவுள்ளனர். (ரி)




## கடவுளே வழிகாட்டு

எழிவான நல்லூரா இந்நாட்டு
எல்லோரின் வாழ்விலும் வழிகாட்டு
பொழிலான மயிலேறி பழியோட்டு
புது வாழ்வை மண்ணிலே நிலை
நாட்டு

தமிழான கடவுளே அருள் கேட்டு
தாள்களைப் பணிகிறோம் ஒளிகாட்டு
அமிழ்தான தமிழிலே உன்பாட்டு
ஆக்கியே வணங்கிட வழிகாட்டு

மதுரகவி.காரை.எம.பி.அருளானந்தன்
தீர்வை தருபவரை சரியாக
தேர்ந்து விடு தேர்தல் வரப் போகுது
தேவாதி தேவே!

தீர்வைத் தருபவரை சரியாக தேர்ந்து விடு
ஆருடன் நோவோம்
அலங்காரக் கந்தனே!
ஆண்டாண்டாய் அனுபவித்தது போது
மினி போருடன் வாழ்வதை நீக்கி விடு
புதியதோர் தீர்வதை பூமியில் தந்துவிடு

சீருடன் வாழ்வதை குரோதியில் உறுதி
செய்து விடு
செய்து முடிப்பவன செம்மையாய்
கொண்டுவா சீலனே!

*மதுரகவி.காரை*
*எம.பி.அருளானந்தன்*

## எமைக் காக்க வாருமையா

நல்லூரில் வீற்றிருக்கும் நாயகனே
நலமருள நாமுன்னை
வேண்டுகின்றோம் பொல்லாத வினை
களெல்லாம் போக்கிடுவாய்
புண்ணியனே உன்னடியைப் போற்று
கின்றோம் அல்லும்ப கலுமுனைநாம்
தொழுதிடுவோம் அடியோமைக்
காப்பதுன்றன் கடமையன்றோ
தொல்லியலார் திணைக்களத்தின்
கெடுபிடியை தொலைத்தேநீ எமைக்
காக்க வாருமையா

கவிஞர் சில்லாலை
■ ஆ.த. குணத்திலகம்

## வருகின்றான் வடிவேலன்!

எங்கள் தமிழ்க் கந்தன்
வீதிவலம் வருகின்றான்!
சங்கரனின் திருமைந்தன்
வேலவன் வருகின்றான்!
இங்கெமது இடர்களை
நீக்கிடவே வருகின்றான்!
சங்கடங்கள் தனைத்தீர்த்து
சாந்திதர வருகின்றான்!

ப.மகேந்திரதாசன்

## நலம் தரும் நல்லைப்பதி

திருத்தணி வாழ் முருகனே!
வேண்டுவோர்க்கு வாரி வழங்கும்
வள்ளலே!

பழனிப்பதி வாழ் பழனி முருகனே!
பசி பஞ்சம் தனை
இல்லாதொழிப்பவனே !

திருப்பரங்குன்றத்து குமரனே! – நின்
திருநாமத்தினால் யாமிருக்கப்
பயமேன் என்றவனே!

நலம் தரும் நல்லையப்பதியில்
நிலை கொண்டவனே!
திருச் செந்தூரச் செல்வனாய்
அமர்ந்தவனே!

■ ஜெயசிங்கம் மிஷாந்தி

### முருகனைச் சிங்களவர் கைப்பற்றிய வரலாறு

# 'கதிர்காமத் திருமுருகன்' தமிழகத்தில் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 23
கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளையின், மலையகம் 200 சிறப்பு வெளியீடாக, பதுளை வ. ஞானபண்டிதன் எழுதிய 'கதிர்காமத் திருமுருகன்' எனும் ஆய்வு நூல் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி செல்லத்துரை சுதர்சனால் எட்டாவது பதிப்பான செம்பதிப்பாக உருவாகியுள்ளது.




தமிழக அரசால் பழனியில் நடத்தப்படவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் இச்செம்பதிப்பு நூல் வெளியிடப்படவுள்ளது.

பதுளை வ. ஞானபண்டிதன், சாதிய அடக்குமுறைக்கு எதிரான பிரசாரகராகவும் செயற்பாட்டாளராகவும் மலையகத்தில் இயங்கியவர். சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உன்னத கருத்தோட்டங்களை மலையக மக்கள் மத்தியில் ஊன்றச் செய்தவர். கதிர்காமத்தின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தவர். பதுளையில் கதிர்காமத் தொண்டர் படையை உருவாக்கியவர். அவர் தமது நீண்டகால ஆராய்ச்சியின் பயனால் 'கதிர்காமத் திருமுருகன்' என்ற இந்த அரிய நூலை அளித்துள்ளார்.

இந்நூல் கதிர்காமத் தலத்தின் கடந்த காலத்தையும் சமகாலத்தையும் படம்பிடித்துக் காட்டுவதுடன் முருகனைச் சிங்களவர்கள் கைப்பற்றிய வரலாற்றைக் கூறுவதுடன் எல்லாவற்றுக்கும் மேலாக, கதிர்காமத் தலத்தைத் தமிழர் பதியே என்று துணிந்து நிறுவியுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஓக.23

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலகமும், தென்மராட்சி கலாசாரப் பேரவையும், சாவகச்சேரி பிரதேசசபையும் இணைந்து ஏற்பாடு செய்த பண்பாட்டுப் பெருவிழா யாழ். வரணி கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது கலைஞர்கள் 'இளங்கலைஞர் விருது', 'கலைச்சாகரம் விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தென்மராட்சி பிரதேச செயலர் உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் லாகினி நிருபராஷ், யாழ்.மாவட்ட உள்ளூராட்சி பிரதி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன், சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் க. சந்திரகுமார், மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் சுகுணலினி விஜயரத்தினம், கலாபூசணம் கந்தையா சந்திரகேது ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ச-25,20,27,9,159)



## முகாமைத்துவக் கற்கை விண்ணப்பம் கோரல்!

கொழும்பு, ஓக. 22

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைநெறிக்கான 2024/25 ஆம் ஆண்டிற்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முகாமைத்துவக் கற்கைகள் சிறப்புமாணிப்பட்டம், கணக்கியல் மற்றும் நிதியியல் முகாமைத்துவக் கற்கைகள் சிறப்புமாணிப்பட்டம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவக் கற்கைகள் சிறப்புமாணிப்பட்டம், மனிதவள முகாமைத்துவக் கற்கைகள் சிறப்புமாணிப்பட்டம், அகிய கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதனை www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக விண்ணப்பிக்க முடியும். மேலதிக தகவல்களுக்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்துடன் தொடர்புகொள்ள முடியுமெனவும் தெரிவித்துள்ளனர். (ச-22)

## அம்புலன்ஸ் சேவை இடமாற்றம்!

யாழ்ப்பாணம், ஓக. 22

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தின்போது ஆலய வீதியின் வடமேற்கு மூலையில் இயங்கிய சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையானது இம்முறை ஆலய தெற்கு வீதியில் இலங்கை வங்கிக் கிளை முன்றலில், யாழ். மாநகர சபையின் உற்சவ காலப் பணிமனைக்கு பின்புறமாக இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(ச-22)



வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் செதில் காவடிகளுடன் இணைந்து திடீரென ஆடியதுடன் அடியவர்கள் பலருக்கும் அருள் வாக்கு கூறியிருந்தார். (ச-25, 66)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஓக.23

இந்தியா றோட்டறிக் கழகம், நல்லூர் றோட்டறிக் கழகம் மற்றும் சுழிபுரம் றோட்டறிக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இலவச மருத்துவமுகாம் மூளாய் ஸ்ரீவதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய அரங்கில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொற்றா நோய்கள் தொடர்பான மருத்துவ ஆலோசனைகள், குருதியமுக்கப் பரிசோதனை, எச்.ஐ.வி., நீரிழிவு பரிசோதனை போன்ற பல்வேறு சேவைகளும் வழங்கப்படவுள்ளன. (ச-25, 66)

## செல்லப்பா சுவாமிகள் மாதாந்த குருபூசை

யாழ்ப்பாணம், ஓக.23

ஈழத்துச் சித்தர் நல்லூர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூசை நிகழ்வு நல்லூர் சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் அருகில் செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் 'உயிர்க்குயிர்க் கடவுள[illegible] சிவயோக சுவாமிகள் 'நூலின் நயப்[illegible]ரையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ்ப்பாண [illegible] ஆற்றுவார். ([illegible]-66)

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஓக.23

வித்தகபுரம் பொற்கலத்தம்பை செல்லப்பா செல்லக்குட்டி சாமியார் சிவாலயம் விசாலாட்சி அம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலய பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.40 மணிக்கு நடைபெறவுள்ளது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ச-45)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கவனமாக செயற்பட வேண்டிய நாள். விரய சந்திரனால் எதிர்பாராத செலவு தோன்றும். அலைச்சல் அதிகரிக்கும். எண்ணியது நிறைவேறும் நாள். திட்டமிட்டிருந்த வேலைகளைச் செய்து முடிப்பீர். வியாபாரம் முன்னேற்றம் அடையும்.

**இடபம்:** அலைச்சல் அதிகரிக்கும் நாள். நீங்கள் எதிர்பார்த்த தகவல் வரும். வியாபாரப் போட்டியாளரால் சிறு சங்கடம் தோன்றும். ஆதாயமான நாள். வியாபாரத்தில் இருந்த தடை விலகும். அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்.

**மிதுனம்:** உழைப்பு அதிகரிக்கும் நாள். உங்கள் முயற்சி வெற்றியாக கடுமையாக போராட வேண்டியதாக இருக்கும். முயற்சியால் முன்னேற்றம் காணும் நாள். நீங்கள் செய்துவரும் தொழில் முன்னேற்றம் அடையும். மேன்மையான நாள்.

**கடகம்:** கோயில் வழிபாட்டில் நன்மை காணும் நாள். நெருக்கடி நீங்கும். உங்கள் முயற்சி வெற்றியாகும். விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். சில சங்கடம் தோன்றும். மனதில் இனம் புரியாத குழப்பம் தோன்றும். நன்மையான நாள்.

**சிம்மம்:** அலைச்சல் அதிகரிக்கும் நாள். உங்கள் செயல்களில் இழுபறி உண்டாகும். தடுமாற்றம் அடைவீர். விருப்பம் நிறைவேறும் நாள். இழுபறியாக இருந்த வழக்கு முடிவுக்கு வரும். வருமானம் திருப்தி தரும். விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள்.

**கன்னி:** தெளிவுடன் செயற்பட வேண்டிய நாள். மனக்குழப்பம் அதிகரிக்கும். குடும்பத்தில் உள்ளவர்களின் ஆலோசனைகளை கேட்பது நல்லது. நினைத்ததை சாதிக்கும் நாள்.

**துலாம்:** முயற்சியால் முன்னேற்றம் காண வேண்டியநாள். வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். எதிர்பார்த்த வருமானம் தள்ளிப் போகும். யோகமான நாள். நம்பிக்கையுடன் செயற்படுவீர். உங்கள் முயற்சியில் இன்று வெற்றியைக் காண்பீர்.

**விருச்சிகம்:** சந்தோஷமான நாள். நீங்கள் எதிர்பார்த்த தகவல்வரும். உங்கள் நிலையில் உயர்வு தோன்றும். தடைகளை சந்திக்கும் நாள். நம்பிக்கையுடன் நீங்கள் மேற்கொண்ட முயற்சி இழுபறியாகும்.

**தனுசு:** தடைகளைத் தாண்டி வெற்றி அடைய வேண்டிய நாள். பணிபுரியும் இடத்தில் பிரச்சினை தோன்றும். அலைச்சலால் உடல் சோர்வடையும். எண்ணியதை நடத்தி முடிக்கும் நாள். உங்கள் முயற்சி இன்று வெற்றியாகும்.

**மகரம்:** இழுபறியாக இருந்த வேலைகளை முடிப்பீர். வரவேண்டிய பணம் வரும். நெருக்கடி நீங்கும் நாள். திட்டமிட்டு செயற்படுவீர்கள். போட்டிகளை சமாளித்து இலாபம் காணும் நாள். எதிர்பார்த்த பணம் வர தாமதமாகும்.

**கும்பம்:** கவனமாக செயற்பட வேண்டிய நாள். குடும்பத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளை சரி செய்வீர். வரவு– செலவில் நிதானம் தேவை. விருப்பம் நிறைவேறும் நாள். வேலையில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும். வியாபாரம் முன்னேற்றமடையும்.

**மீனம்:** நினைத்ததை அடையும் நாள். எதிர்பார்த்த பணம் வரும். குடும்பத்தினர் தேவைகளை நிறைவேற்றுவீர். நெருக்கடிக்கு ஆளாகும் நாள். வேலைப் பளுவால் மனம் சோர்வடையும். தடையும் தாமதமும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பதிலடியும் தடுமாற்றமும்


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னர் இருந்தே ஒரு குற்றச்சாட்டை திரும்பத் திரும்ப முன்வைத்து வருகின்றார். நாடு நெருக்கடி நிலையில் இருந்தபோது அதாவது 2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்சவிலகியபோது பொறுப்பேற்க வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்கவில்லை. துணிவுடன் தான்மட்டுமே முன்வந்து பொறுப்பேற்று நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டதாகவும் ரணில் கூறிவருகின்றார். இந்தக் கூற்றை ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின்போதும் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் கூறியிருக்கின்றார்.

இவரது கூற்றுக்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித், 'நான் அதிகாரத்தை எடுக்கவில்லை என்று பல்வேறு தரப்பினர் கூறிக்கொண்டிருந்தாலும் ராஜபக்சக்கள் உள்ள இடத்தில் நான் இருக்க விரும்பவில்லை. திருடர்கள் மற்றும் ஊழல்வாதிகளுடன் டீல் இல்லாத காரணத்தால் பதிலீடாக ஜனாதிபதிப் பதவியை பொறுப்பேற்கவில்லை. நான் இந்த ஜனாதிபதி கதிரைக்கு மக்களின் வாக்குகளாலே தெரிவுசெய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமாரவோ, '2022ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபயவுக்கு ஒரு கடிதத்தை எழுதினோம். இந்த நெருக்கடியை தீர்த்து வைக்க தேசிய மக்கள் சக்தி தயார். எங்களுக்கு அதிகாரத்தை தாருங்கள் என்று. குறைந்தபட்சம் அந்தக் கடிதம் கிடைத்தது என்று கூட எங்களுக்கு பதில் கிடைக்கவில்லை. அடுத்ததாக நாடாளுமன்றத்தில் நான் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் ஜனாதிபதிப் பதவிக்காக போட்டியிட்டேன். எங்களுக்கு வாக்களித்திருக்கலாமே. எங்களுக்கு சார்பாக நாடாளுமன்றத்தில் எவருமே வாக்களிக்கவில்லை. அதற்கான காரணம் என்ன? அவர்கள் ஒருபோதுமே எங்களுக்கு அப்படி அதிகாரத்தைக் கொடுக்கமாட்டார்கள்' என்று தெரிவித்திருக்கின்றார்.

அநுரவின் பதிலடியால் சஜித்தின் தடுமாற்றம் வெளிப்படையாகியிருக்கின்றது. சஜித் பிரேமதாஸ, ராஜபக்சக்கள் இருக்கும் இடத்தில் தான் இருக்க மாட்டேன் என்று குறிப்பிடுகின்றார். ஆனால் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் 2022ஆம் ஆண்டு இடம்பெற்றபோது, அதில் களமிறங்குவதை இறுதி நேரத்தில் தவிர்த்துக் கொண்டு அதுவரை ராஜபக்சக்கள் முகாமிலிருந்த டலஸ் அழகப்பெருமவின் பின்னால் ஒளிந்து கொண்டார். டலஸை, சஜித் ஆதரித்தார் .ராஜபக்சக்கள் இருக்கும் இடத்தில் தான் இருக்க மாட்டேன் என்பதால் பதவியை ஏற்கவில்லை என்பதைக் குறிப்பிடும் சஜித், அதற்கு முரணாகவே நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தலில் நடந்து கொண்டார்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் பெரமுனவின் அரசாங்கத்தையே மக்கள் விரட்டியடித்தார்கள். பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தேசிய மக்கள் சக்தியில் இணைய வந்தபோதும் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அநுர பகிரங்கமாகக் கூறியிருந்தார். ஆனால் ரணில் விக்கிரமசிங்க பெரமுனவினரை அதாவது மக்கள் யாரை விரட்டியடித்தார்களோ அவர்களை அரவணைத்துக் கொண்டார். அதேபாணியில் சஜித்தும் தற்போது பெரமுனவின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலக் ராஜபக்சவையும், மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருணாதாச கொடித்துவக்குவையும் தனது கட்சியில் இணைத்துக்கொண்டுள்ளார். சஜித்தின் முன்னுக்குப் பின் முரணான நடவடிக்கைகள் அவரது தடுமாற்றத்தை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றன. அது ரணிலின் குற்றச்சாட்டை சரியாக்கும் வகையில் அமைந்திருக்கின்றது என்பதும் இங்கு நோக்கத்தக்கதே.



800 மில்லியன் டொலரில்

# வடக்கு கிழக்கில் புதிய முதலீட்டு வலயங்கள்



கொழும்பு, ஓக. 23

**தற்போதைய அரசாங்கத்தின் புதிய முதலீட்டுத் திட்டத்தின் கீழ் 7 புதிய முதலீட்டு வலயங்களை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.**

மாங்குளம், பரந்தன், காங்கேசன்துறை, திருகோணமலை, இரணவில, அம்பாந்தோட்டை மற்றும் பிங்கிரிய ஆகிய பிரதேசங்களை அண்மித்துமுதலீட்டுவலயங்கள்நிறுவப்படவுள்ளன. கடந்த 6 மாதங்களில் முதலீட்டு ஒப்பந்தங்களில் இதற்கென 800 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப்பெற்றுள்ளது. இலங்கையின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான 27 திட்டங்கள் தற்போதும் செயற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## பாடசாலைகளில் ஏ.ஐ. திட்டம்

*அமைச்சரவை அனுமதி*

கொழும்பு, ஓக. 23

தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் பங்கேற்புடன் ஏ.ஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவை மாணவர் முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த பாடசாலைகளில் 6ஆம் தரத்திலிருந்து 9ஆம் தரம் வரையில் பயிலும் மாணவர்கள் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். (ச)

## எரிபொருள், தேயிலை உரம்; அரசால் மானியம்

கொழும்பு, ஓக. 23

கடற்றொழிலாளர்களுக்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் லீற்றருக்கு 25 ரூபா மானியம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதேவேளை, தேயிலை துறையினருக்கு 4,000 ரூபா உர மானியம் வழங்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச)

## தேர்தல் சர்ச்சைக்கு தீர்வு நிலையங்கள்

தேர்தல் வன்முறைகள் குறித்து அறிவிக்க நாடு முழுவதும் தேசிய தேர்தல் சர்ச்சை தீர்வு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, அனைத்து மாவட்டங்களிலும் இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## லங்கா சதொச ஈட்டியது 93 மில்லியன் இலாபம்

கொழும்பு, ஓக. 23

லங்கா சதொச நிறுவனம் இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் 93 மில்லியன் நிகர இலாபத்தை ஈட்டியுள்ளது.

இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நான்கு வீதம் அல்லது 837 மில்லியன் வருமான வளர்ச்சியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

24.08.2024

சனிக்கிழமை - ஆவணி - 08

சுபநேரம் : 03.05 - 04.35

ராகுகாலம் : 09.05 - 10.35

**நாளொரு நல்வார்த்தை**

அறிவு என்பது புதையல் பெட்டகம்;
பயிற்சியே அதன் திறவுகோல்

- ஜேம்ஸ் கமரூன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுவலக உதவியாளர் தேவை (பெண்)

திருநெல்வேலியில் இயங்கும் கல்வி நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர் தேவை. கணக்கியல் மற்றும் கணினி அறிவு அவசியம்.

தொடர்பு: 077 386 74 58


# முதியோர் கொடுப்பனவு இன்றுமுதல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ். மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளில் ஜூலை மாதத்துக்கான முதியோர் கொடுப்பனவு இன்று வெள்ளிக்கிழமை முதல் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. முதியோர் கொடுப்பனவு பிரதி 15 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை விநியோகம் இடம்பெறும். கொடுப்பனவு நேற்று பிரதேச செயலக சமூக சேவைகள் அலகினால் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இன்று தொடக்கம் கொடுப்பனவு விநியோகம் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)




## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய ராஜகோபுரம் திருப்பணிக்கான கேள்வி விலைமனுக்கோரல்

மேற்படி துறையில் நிபுணத்துவம் பெற்ற அனுபவம் மிக்க ஸ்தபதிகளிடம் இருந்து விலை மனுக்கள் கோரப்படுகின்றன. எனவே இந்தத் துறையில் அனுபவம் மிக்கவர்கள் நேரடியாக ஆலயத்திற்கு வருகை தந்து கோபுரம் சம்பந்தமான விபரங்களை பெற்று 10 நாள்களுக்குள் அதற்குரிய விலை மனுக்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
தர்மகர்த்தா சபை,
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

(cs.55998) (N-1)


# கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.23

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி அலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் செப்ரெம்பர் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளன.

நவாலி கதிர்காம முருகன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. (ச-45)

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை
### உப அலுவலகம், உடுவில்.
### வட்டாரம் - 6 குமாரலிங்கம் வீதி, ஆதன இல. 14

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் -6 குமாரலிங்கம் வீதியில் அமைந்துள்ள 14 இலக்க ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் M.ஈஸ்வரியம்மா உரிமைகோருபவர் K.தெய்வநாயகி எனும் பெயரில் உள்ளது.

மேற்படி ஆதனம் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க் கோவிற்பற்று கோண்டாவில் இறை: தற்போது வலி தெற்கு பகுதி இணுவில் இறை: வலி தெற்கு பிரதேசசபை, வலி தெற்கு பிரதேச செயலர் பிரிவு கிராமசேவையாளர் பிரிவு J/189இல் அமைந்துள்ள "அரசு நின்ற ஒல்லை" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு,5 குளி 11 இதில் அறுதியாக விற்ற பாகங்கள் நீக்கி நிலப்பரப்பு 1 குளி 15.74 வீடும் கிணறும் பயிர்களும் இராஜரட்ணம் கிறிஸ்ரி செல்வநாயகமும் பெண் தேவநாயகியும் என்பவர்களால் பிரசித்த நொத்தாரிசு செல்வி ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் 11254ம் இலக்க 02.06.2016ந் திகதிய உறுதிப்படுத்தல் உறுதி மூலம் உறுதிப் படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாதனம் எங்களில் 2ம் பெயரில் பெற்றோரான காலம்சென்ற செல்லர் மயில்வாகனம் பெண் ஈஸ்வரிஅம்மாவுக்கு, இதன் கீழ் விபரிக்கப்படுவதும், 24.09.1952ல் பிரசித்த நொத்தாரிஸ் வே.வினாசித்தம்பி முகதாவில் 6336ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி குறித்த ஆதனம் அவர்களின் கொள்வனவும் ஆட்சியுமானது. அவர்களுக்கு நான் மட்டுமே ஒரே பிள்ளையாவேன், எனவே குறித்த ஆதனம் எனது மாதா பிதாவழி முதுசமும் ஆட்சியுமானது என இத்தால் வெளிப்படுத்தி இந்த உறுதிப்படுத்தல் உறுதி முடித்துக்கொள்கின்றேன். இவ்வாதனத்தை இவ்விதம் உறுதி முடித்துக்கொள்ள எமக்குப்போதிய உரித்தும் தத்துவமும் உண்டென்றும், இவ்வாதனம் யாதொரு வகையிலாயினும் பாரிக்கப்பட்டோ அல்லது பராதீனப்படுத்தப்பட்டோ இருக்கவில்லையென்றும் குறித்த வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் சி.விஸ்வநாதன் அவர்களால் 04.08.2024 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 1488 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக்குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நில.பர 1 குளி 15.74ம் அதற்குரியவைகளும் இதற்கெல்லைகளாக

**கிழக்கு** :- நடராஜா சரவணபவன் பெண் ராணியின் ஆதனமும்.
**வடக்கு** :- குமாரலிங்கம் வீதியும்
**தெற்கு** :- பொன்னம்பலம் குமாரலிங்கம் பெண் தங்கம்மாவின் ஆதனமும்
**மேற்கு** :- சுப்பையா சிவசம்பு, மகாதேவன் பெண் லோகநாயகி ஆகியோரின் ஆதனங்கள்

எனவே மேற்குறித்த ஆதனத்தினை கருணாகரன் லசிதரன் பெண் கார்த்திகா தனது பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது கருணாகரன் லசிதரன் பெண் கார்த்திகா எனும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்குபிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி சாரதா உருத்திரசாம்பவன்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

2024.08.15


(cs.55999) (N-1)

## பெயர்மாற்றம்

4 ம் கட்டை ஆனைக்கோட்டை-யாழ்ப்பாணம் வீதியில் வசிக்கும் சுவர்க்கீன் பிள்ளை யூட் வின்சன் ஆகிய நான் எனது பெயரை யூட் வின்சன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் யூட் வின்சன் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

யூட் வின்சன்

## மரண அறிவித்தல்



### செல்லையா சண்முகசுந்தரம்

**(சமாதான நீதவான்-JP, முன்னாள் செயலாளர் கொக்குவில் மேற்கு சனசமூகநிலையம், "சுப்பிரமணியம் மாலதி" ஆரம்ப சுகாதார பராமரிப்பு முன்பள்ளி நிலையம்)**

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சண்முகசுந்தரம் நேற்று (22.08.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகேசன்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் கஜேந்திரன் (வைத்தியர் யாழ் போதனா வைத்தியசாலை), கஜேந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் உடுவில் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌசல்யா (வைத்தியர்), ஸ்ரீபவன் (மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ் மாவட்டச் செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் , கானுஷன், கபினுஷன், கனிஸ்கா, பிரதிஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா, வேலாயுதபிள்ளை, தங்கரத்தினம், மகேஸ்வரி, பூமணி, தவமணி மற்றும் பரமலிங்கம் ஆகியோரின் சகோதரனும் நாகேந்திரன், காலஞ்சென்றவர்களான லோகேந்திரன், மகேந்திரன் மற்றும் நாகேஸ்வரி, லோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இடம் பெற்று இன்று (23.08.2024) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 225 5191

(CS 1191) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் ஆள் மாற்றம் மட்டுமே

## கொக்குத்தொடுவாய் மக்கள் தெரிவிப்பு

**முல்லைத்தீவு, ஓக. 23**

**ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மக்கள் பல்வேறு கருத்துகளை தெரிவித்தாலும் ஆட்சியில் உள்ளவர்கள்தான் மாறப்போகின்றார்கள். ஆனால் அவர்களின் கொள்கை ஒன்றுதான் என கொக்குத்தொடுவாய் மக்கள் தெரிவித்துள்ளார்கள்.**

கொக்குத்தொடுவாயிலிருந்து அரசாங்கத்தால் வெளியேற்றப்பட்டு அந்த மண்ணில் குடிய மர்வதற்காகப் போராடி வரும் மக்கள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தெரிவித்ததாவது,

நாங்கள் எத்தனையோ தேர்தலைக் கண்டுள்ளோம். பல ஜனாதிபதிகள் வந்தார்கள். எல்லோரும் ஜனாதிபதியாக வரமுன்னர் முன்கூட்டி ஆசைக்கதையைப் பேசி மோசம் செய்யும் ஆட்கள்தான். தமிழர் ஒருவர் இலங்கையில் ஜனாதிபதியாக வருவார் என்ற எதிர்பார்ப்பு எங்களிடம் உள்ளது. ஆனால் நம்பிக்கை இல்லை. அந்தளவுக்கு ஏமாற்றப்பட்டவர்கள் நாங்கள்தான்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பாத்திரம்தான் மாறுகின்றது. அந்தப் பாத்திரத்தினுள் உள்ள பால் ஒன்றுதான். இதுதான் இலங்கையின் நிலைமை - என்றனர். (ஒ-19)

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு!

யாழ்ப்பாணம் , ஓக. 23

இலங்கைக் கடற்பரப்புக்கு அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடந்த மாதம் 23 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 9 தமிழக மீனவர்களின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த 9 மீனவர்களும் கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் முற்படுத்தியபோது அனைவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். (ச-22,66)

# ஜப்பான் அரசால் மடிக்கணினிகள்!

ஜப்பானிய அரசாங்கம் 2இலட்சத்து 60 ஆயிரம் டொலர் பெறுமதியான 278 மடிக்கணினிகளை ஐ.நா.சனத்தொகை நிதியத்தினூடாக சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சுக்கு அன்பளிப்புச்செய்துள்ளது.

இதனூடாக பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான சகல தரவுகளையும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமது கணினிகளில் தரவேற்றி பாதுகாக்கமுடியும். அத்துடன் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கிடையிலான தொடர்பாடல் வலைப்பின்னலையும் உருவாக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமூக குழுக்கள், சட்டத்தை நிறைவேற்றும் அதிகாரிகள் போன்றவர்களுடனான தொடர்பாடல்களை இலகுவாக்கவும் இந்தக் கணினிகள் உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22-6)

# சுகாதார சேவைக்கு அதிக நிதிஒதுக்கீடு!



கொழும்பு, ஓக. 23

இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் கட்டுப்படுத்தல் செயற்றிட்டத்துக்காக எதிர்வரும் வருடங்களில் அதிகளவு நிதியை ஒதுக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்..

அத்துடன் ஆரம்ப சுகாதார சேவைக்கு ஒதுக்கப்படும் நிதியை அடுத்த வருடத்தில் மேலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மேலாக நோய்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும்.

அதேபோன்று வயது முதிர்ந்தவர்களில் நூற்றுக்கு 24 வீதமானோர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால் சிறுநீரகப் பாதிப்புகளும் அதிகரித்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## தேர்தல் தொடர்பில்

# கிராம அலுவலர்களுக்கு முன்னாயத்த செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக. 23

செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்படவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக கிராம அலுவலர்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வு யாழ். மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரண்டு அமர்வுகளாக யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

செயலமர்வில் யாழ். மாவட்டத்தின் அனைத்து நிர்வாகக் கிராம அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் கலந்து கொண்டனர். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்களிப்பு நிலையங்களில் கிராம அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் விளக்கமளித்தார். (ச-22,6627)

# 35 நாடுகளுக்கு கதவைத் திறந்த இலங்கை

கொழும்பு, ஓக. 23

ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் 35 நாடுகளின் பிரஜைகள் விசா இன்றி இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளலாம் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை இந்தத் தீர்மானத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

பிரிட்டன், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா, பிரான்ஸ், நெதர்லாந்து, டென்மார்க், கனடா, சுவிட்சர்லாந்து, இத்தாலி, அமெரிக்கா, சுவீடன், ஆஸ்திரியா என்பன உள்ளடங்கலாக [illegible] நாடுகள் ஐரோப்பிய நாடுகள் பலவும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. (ஒ-6)

# ப தினம் தெரியுமோ?

**இரவல் சீலையில கொய்யகம் போடுறது எங்கட அரசியல்வாதிமாருக்கு பரம்பரை வருத்தமா மாறிட்டுது. அதுவும் இந்த எலக்சன் காலத்தில "அதை நாங்கள் செய்தம், இதை நாங்கள் செய்தம் " எண்டு போட்டி போட்டுகொண்டு தங்களை விளம்பரப்படுத்திறதுக்கு ஆலாய்ப்பறந்து கொண்டிருக்கினம். இப்பிடியான அரசியல்வாதிமாருக்கு ஐஸ் வைச்சு, தங்கட தனிப்பட்ட தேவையளை முடிக்கிறதுக்கு அதிகாரிமாருக்கும் இதைவிட்டால் வேற சான்ஸ் கிடைக்காதெல்லோ. அதால என்னென்ன வழியளில தங்களுக்கு வேண்டிய அரசியல்வாதிமாரை 'பப்பாவில ஏத்த' முடியுமோ அந்தந்த வழியளில கும்பம் வைச்சு கூப்பிட்டுக்கொண்டிருக்கினமாம்.**

**ஒருபானை சோத்துக்கு ஒரு சோறு பதம் மாதிரி ஒரு சம்பவம். கிளிநொச்சியில கந்தபுரம் - கண்ணகைபுரம் இணைப்பு வீதி எண்டு ஒரு றோட். நீர்ப்பாசனத் திணைக்களத் துக்குச் சொந்த மான அந்த றோட்டால சனங்கள் போய் வாறதே ஒரு சாகசம் தான். உந்த றோட்டில வாகனங் களை ஓடினால், எந்தக் காட்டிலையும் மேட்டிலையும் ஓடக்கூடிய வல்லமை வந்திடும். அந்தளவுக்கு எங்க பள்ளம், திட்டி இருக்கெண்டே கண்டுபிடிக்க முடியாதள வுக்கு எல்லா இடமும் பள்ளமும் திட்டியும் விளைஞ்சு கிடந்த ஒரு றோட் அது. அது றோட் தானோ எண்டது கூட அதில போய்வாறவைக்குச் சந்தேகம் வந்திடும். அப்பிடிப்பட்ட றோட்டை திருத்தச் சொல்லி அந்த ஊர்ச் சனம் அங்கைத்தை எம்.பி.யிட்ட கனகாலமாக் கோரிக்கை வைச்சிருக்கினம். அந்த எம்.பி.யும் இதைப் பற்றி மேல்மட்டங்களுக்கு எடுத்துச் சொல்லி, கனதரம் கடிதங்கள் எழுதி நீர்ப்பாச னத் திணைக்களக்காரரிட்ட மதிப்பீட்டு அறிக்கையெல்லாம் வாங்கி ஒருமாதிரி அதைத் திருத்திறதுக்கு நிதியை ஒதுக்கச் செய்து போட்டார். அந்த எம்.பி. கேட்டுத்தான் கண்ணகைபுரம் றோட்டை திருத்த நிதி ஒதுக்கின தெண்டு கடிதமும் உரிய இடங்களுக்கு அனுப்பப்பட்டி ருக்கு.**

**இப்ப அந்த றோட்டின்ர திருத்தவேலை இந்தக் கிழமை தொடங்கிட்டுது. ஆனால் எந்த எம்.பி. இந்தத் திட்டத்துக்காக ஓடுப்பட்டு அனுமதி வாங்கிகுடுத்தாரோ அவரை ஆரம்பநிகழ்வுக்கு வரச்சொல்லி ஒருத்தரும் கூப்பி டேலையாம். வட்சப்பில மட்டும் "திருத்தவேலை தொடங்கப்போறம்" எண்டு மொட்டையா நீர்ப்பாசனத் திணைக்களக்காரர் சொல்லிப்போட்டு விட்டிட்டினம். எலக்சன் காலத்தில இப்பிடியான திட்டங்களை ஆரம்பிக்கேக்க அரசியல்வாதியளைக் கூப்பிடக்கூடாது தானே. அதாலாதான் நீர்ப்பாசனத் திணைக்களக்காரர் தங்களுக்குச் சொந்தமான றோட்டை திருத்திற ஆரம்பநிகழ்வுக்கு தன்னை வரச்சொல்லிக் கூப்பி டேலை எண்டு அந்த எம்.பி.யும் பெரிசா அலட்டிக் கொள்ளேலை. ஆனால் ஆரம்ப நிகழ்வு முடிஞ்சபிறகு பேஸ்புக்கில ஒரு கட்சி, தங்கட அமைச்சரால ஒதுக்கப்பட்ட நிதியில அந்த றோட்டுவேலை தொடங்கியிருக்கு எண்டு அறிக்கை யும் விட்டு படங்களும் போட்டிருக்கினம்.இரவல் வீணையில அமைச்சரும் சுதியை மீட்டிப்போட்டு, போட்டோவும் எடுத்துப்போட்டு வந்திட்டார். சரி, அமைச்சர்தான் இப்பிடி பேருக்கு ஆசைப்பட்டு போட்டார். அவரைக் கூப் பிட்ட திணைக்களக்காரருக்கு உண்மைதெரியும். அப்பிடித் தெரிஞ்சும் அவை இப்பிடித் தேர்தல் விதியையும் மீறி, இன்னொரு எம்.பி. ஒதுக்கின திட் டத்தை ஆரம்பிச்சு வைக்க அமைச்சரைக் கூப்பிட்டவை எண்டால், அவைக்கு அமைச்சரால ஏதோ காரியம் ஆகோணும் போல. அதுக்காக இப்பிடி வழித்தேங்காயை எடுத்து அமைச்சருக்கு உடைக்கிறதோ?**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளர்: தேர்தல் பரப்புரை இன்று

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் பரப்புரை பொலிகண்டியில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் ஆதரவுடன் பா.அரியநேந்திரன் பொதுவேட்பாளராகக் களமிறங்கியுள்ள நிலையில் அவருக்கான ஆதரவு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

'பொலிகண்டி முதல் பொத்துவில் வரைக்கும்' என்றமுழக்கத்துடன் தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் பரப்புரைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் என தேர்தல்பிரசாரம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் இன்று மு.ப. 10 மணிக்கு பொலிகண்டியில் தேர்தல் பரப்புரைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ-ம-100)

## 39 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகம் 16 . 12 . 1921



விண்ணுலகம் 03 . 09 . 1985

**அமரர் முருகப்பர் கந்தையா**

(நெடுந்தீவு மேற்கு)

திதி: ஆவணி அபரபக்க சதுர்த்தி

" அம்மாவின் அன்பு கடல் அலை போல
வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் - ஆனால்
அப்பாவின் அன்பு நடுக்கடல் போன்றது
வெளியே தெரியாது ஆனால் ஆழம் அதிகம்"

10, பாரதிசனசமூக நிலைய முன் வீதி,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

அப்பா உங்கள் அன்புக்காகவும் பாசத்திற்காகவும் தவிக்கும் உங்கள்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CS 55993) N-1

## INVITATION FOR BIDS (IFB)
## DISTRICT SECRETARIAT - MULLAITIVU.

**Construction of (Balance Work) Three Storied Technological Faculty at Mu/Puthukkuddiyiruppu M.M.V Mullaitivu.**

**MU/KAC/PRO/WO-2024/24**

1. The Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu on behalf of the Government Agent / District Secretary, Mullaitivu now invites sealed bids from eligible and qualified bidders for Construction work described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements;
   a. Bidders shall Registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Buildings construction for grade mentioned in the table below.
4. Qualification requirements are indicated in Section 4 of the Bidding Document. Additional details are provided in the Bidding Data and Contract Data (Section 5)
5. Interested bidders may obtain further information from Accounts Branch, District Secretariat, Mullaitivu and inspect the bidding documents at District Secretariat from 9.00 am to 03.00 pm on working days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the District Secretary, Mullaitivu, from 23 th August 2024 to 12 th September 2024 from 09.00 am to 03.00 pm upon payment of a non-refundable fee of Rs.2000.00. The method of payment will be cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered to Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu on or before 03.00 pm on 13 st September 2024. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. Pre-Bid meeting held on 09 September 2024 at 2.00 pm.

| Bid ID | Description of work | Estimated amount (Rs.)(without VAT) Million | Contract Period (Days) | Grade Request | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Bid Security Amount | Validity Period |
| MU/KAC/PRO/WO-2024/24 | Construction of (Balance Work) Three Storied Technological Faculty at Mu/Puthukkuddiyiruppu M.M.V Mullaitivu. | 24.17 | 210 | C6 & C5 (Buildings) | 242,000.00 | Till 08.01.2025 |

(Cr.42957) (N-1)

**Chairman,
Departmental Procurement Committee,
District Secretariat, Mullaitivu.**

**Date: 23.08.2024**

## வவுனியா வடக்கு பிரதேச சபை
### கேள்வி அறிவித்தல் திருத்தம்

22.08.2024 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்த கேள்வி அறிவித்தலில் ஆகக்குறைந்த கேள்வித்தொகை 80.000.00 என தவறுதலாக எம்மால் குறிப்பிடப்பட்டிருந்தது. **மேற்படி தொகை 800,000.00 ஆக திருத்தம் செய்யப்படுகிறது.**

செயலாளர்
வவுனியா வடக்கு பிரதேச சபை.

## தேடுகிறோம்

- **பெயர் : வைத்திலிங்கம் சக்திவேலன்**
- **வயது : 78**
- **மனைவி பெயர் : பவா**
- **பிறந்த இடம் : தருமபுரம்**
- **1960 தொடக்கம் 1968 வரை கொக்குவிலில் வசித்தார்.**
- **பிள்ளைகள் : 2**

அவுஸ்ரேலியாவில் இருந்து தொடர்புகொள்ள விரும்புகின்றோம்:
தொடர்பு: Dr.Tharmendra:
**077 355 0940**

(cs.55989) (N-1)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர்**
## கேமநளினி கணேசமூர்த்தி

ஏழாலை தெற்கு, விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் சூராவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கேமநளினி கணேசமூர்த்தி (ஓய்வுநிலை ஆசிரியர்) கடந்த 25.07.2024 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் (ஆயுள்வேத வைத்தியர்) - சோதிமலர் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணேசமூர்த்தியின் (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்) பாசமிகு மனைவியும், சுகன்யா (ஆசிரியர், யா / மயிலணி சைவ மகாவித்தியாலயம்), கோமேதன் (மென்பொறியியலாளர், AKH, IT Solution) ஆகியோரின் அன்புத் தாயாரும், துஷ்யந்தன் (அதிபர், மு / நெத்தலியாறு தமிழ் வித்தியாலயம்), தனுசியா (BSc பட்டதாரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சந்தோஷ், ஆதினியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிறேமநளினி (லண்டன்), கௌரிபாலன் (பிரான்ஸ்), பாமநளினி (ஆயுள்வேத வைத்தியர்), ரஞ்சிதநளினி (ஓய்வுநிலை ஆசிரியர்), அம்பிகைபாலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (25.08.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்விற்கும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் **இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

'விஜய பவான்'
சூராவத்தை,
சுன்னாகம்.

**குடும்பத்தினர்**
**077 800 6586**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உபகரணங்கள் வழங்கிவைப்பு

பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டுக் கழகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளையின் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவனால் விளையாட்டுக் கழகத்துக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கலைமகள் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், சுழிபுரம் மேற்கு சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி-125)



யாழ். பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் வருடாந்த ஆவணி மஹோற்சவத்தின் 10 ஆம் நாள் புன்னைமர சேவைத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-45-27)



## விருதுகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக.23

ஐக்கிய நாடுகள் சபையில் பதிவுசெய்யப்பட்ட ஐக்கிய இயற்கை சர்வதேச அமைப்பின் தேசிய 4ஆவது மாநாடு யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நவமங்கை நிவாச இயக்குநர், சமூக சேவகி சுவர்ணா நவரத்தினம் மற்றும் சமூக சேவையாளரும், மருத்துவருமான கணேசவேல் ஆகியோருக்கு சர்வதேச சிறந்த சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன. கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்குமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விருதுகளை வழங்கிவைத்தார். (ச-45-27)



வன்னிமன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் 121 ஆவது நினைவு விழா தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி ப.ஜெயராணி தலைமையில் கற்சிலைமடு கிராம அலுவலர் பணிமனையில் அண்மையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் ஒட்டுசுட்டான் உதவிப் பிரதேச செயலர், பிரதேசசபை பொறுப்பதிகாரி, கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-25, 500)



## பரிசில்கள் வழங்கல்

மன்னார், ஓக.23

நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு செல்வமுத்துமாரியம்மன் ஆலயக் கல்வி மேம்பாட்டு அமையத்தால் மாணவர்கள், இளைஞர்கள், பெற்றோர்களுக்காக சைவசமயம் தொடர்பாக நடத்தப்பட்ட அறநெறிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் நிகழ்வில் தரம் -5 புலமைப் பரிசில், சாதாரண தரத்தில் சித்தி பெற்றவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகிய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ச-45,213)


பளை தர்மக்கேணி அ. த.க. பாடசாலை ஆசிரியர் நலன் புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆண்டு இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர், ஆசிரியர்கள் பாடசாலை சமூகத்தினரால் அண்மையில் மதிப்பளிக்கப்பட்டனர். (ச-9)



## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஓக.23

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் குடிசன வீட்டு வசதிகள் தொகைமதிப்பு பணியில் ஈடுபடவுள்ள ரெப்லட் கணனி தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான இரு நாள் பயிற்சிப் பட்டறை கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன்விருத்தி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டபதில் செயலரும், தொகைமதிப்பு ஆணையாளருமான எஸ்.முரளிதரன், கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் , மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் புள்ளிவிபர உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ச-25-273)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றதிகார ஒழிப்பு நாட்டுக்கு கட்டாயம் தேவை

## கொள்கை வகுப்பாளர்கள் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 23**

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை ஒழிப்பு, ஊழல் ஒழிப்பு என்பன நாட்டை முன்னேற்றுவதற்குத்தேவையான அடிப்படை விடயங்கள் என கொள்கை வகுப்பாளர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.**

கொரிய இலங்கை வர்த்தக கழகம் ஏற்பாடு செய்திருந்த எதிர்கால இலங்கை சவால்கள் என்ற தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெரிற்றாஸ் ரிசேர்ச் நிறைவேற்று அதிகாரி நிஷான் டீ மெல், அட்வகேற்றா ஆய்வு நிறுவனத் தலைவர் முர்தசா ஜபார்ஜி, மத்திய வங்கியின் முன்னாள் உதவி ஆளுநர் அனிலா டயஸ் பண்டாரநாயக்கா, ஹற்றன் நஷனல் வங்கி முகாமைத்துவப் பணிப்பாளர் ஜொனாதன் அலஸ் ஆகியோர் மேற்படி நிகழ்வுக்குப் பிரதான பேச்சாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

முர்தசா ஜபார்ஜி, நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்படவேண்டுமென தெரிவித்துள்ளார். ஊழல் இல்லாத ஒரு கலாசாரத் திட்டம் உருவாக்கப்பட வேண்டுமென ஜொனாதன் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஊழலிலிருந்து பாதுகாக்கும் ஊழலற்ற சுயாதீன மத்திய வங்கி தேவை என நிஷான் டீ மெல் தெரிவித்துள்ளார்.

தொழில் சட்டங்களில் பெண்களின் உரிமைகள் உள்வாங்கப்படவில்லை. தொழில் சட்டம், ஊதிய சட்டம் என்பன பெண்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் திருத்தம் செய்யப்படவேண்டும் என அனிலா டயஸ் பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். (ஒ-6)


## கேள்வி அறிவித்தல்
## சபைநிதி வேலைத்திட்டம் - 2024
## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பபாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்விக்கமைய நடாத்தப்படும். எனினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(i)/(ii) and (iii) ஆம் இலக்க 2021.02.18 திகதிய மற்றும் 01/2024ஆம் இலக்க 01.03.2024 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதுடன். வட மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 6651) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் தொகுதி ஒன்றை தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 23.08.2024ந் திகதியிலிருந்து 05.09.2024ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர்,உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 06.09.2024ந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவே அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணைகளில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் செலுத்தி அதன் உண்மைப்பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2024.09.02ந் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளமுடியும்.

10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை தகுந்த காரணங்களுடன் நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

| தொ இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | i)யூனியன் மைதான வீதி புனரமைத்தல் ,ஆனைக்கோட்டை (ii) கண்ணிதோட்ட வீதி புனரமைத்தல், சுதுமலை வடக்கு iii) கம்சாகடை வீதி புனரமைத்தல் (மிகுதிவேலை) சண்டிலிப்பாய் மேற்கு NP/14/41(16)/W/CF/2024/20 | 3.37 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 33,800.00 | 04.12.2024 |
| 02 | i)சின்னப்பா வீதி இரண்டாம் ஒழுங்கை புனரமைத்தல்(மிகுதிவேலை) ,நவாலி கிழக்கு ii)முருகமூர்த்தி வீதி புனரமைத்தல்,சாவல்கட்டு NP/14/41(16)/W/CF/2024/21 | 2.08 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 20,900.00 | 04.12.2024 |
| 03 | i)சென்அன்ரனீஸ் மைதான வீதி புனரமைத்தல்(கட்டம்) 1) பெரியவிளான் ii)சித்திரமேழி வெள்ளவாய்க்கால் வீதி புனரமைத்தல் இளவாலை NP/14/41(16)/W/CF/2024/22 | 2.50 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 25,000.00 | 04.12.2024 |
| 04 | i)சகாயபுரம் RDS வீதி முதலாம் ஒழுங்கை புனரமைத்தல்,மாதகல் கிழக்கு ii)சகாயபுரம் RDS வீதி இரண்டாம் ஒழுங்கை புனரமைத்தல்,மாதகல் கிழக்கு NP/14/41(16)/W/CF/2024/23 | 3.02 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 30,300.00 | 04.12.2024 |
| 05 | வைத்தியசாலை வீதி புனரமைத்தல்,பண்டத்தரிப்பு NP/14/41(16)/W/CF/2024/26 | 3.73 | 63நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 37,300.00 | 04.12.2024 |
| 06 | அம்மன் வீதி புனரமைத்தல்,பண்டத்தரிப்பு NP/14/41(16)/W/CF/2024/25 | 5.68 | 63 நாட்கள் | C7 and C6 (வீதி) | 77நாட்கள் | 56,900.00 | 18.12.2024 |

தலைவர்,
உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய்.
23.08.2024

(CR/42966) J-1


## மோ.சைக்கிள் மோதி மாணவன் காயம்!

யாழ்ப்பாணம், ஓக. 23


வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் நின்ற மாணவனை மோதிவிட்டுத் தப்பியோடியுள்ளது.

காயமடைந்த மாணவன் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் அண்மையில் முகமாலை ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

பளை, இந்திராபுரத்தைச் சேர்ந்த 13 வயதுடைய மாணவனே காயமடைந்தவராவார்.

விபத்து தொடர்பில் பளைப் பொலிஸார் விசாரணைகளை
முன்னெடுத்துள்ளனர். (ச-9)

## காற்றால் வீடு சேதம்



யாழ்ப்பாணம், ஓக. 23

பளை இந்திராபுரத்தில் நேற்றுமுன்தினம் வீசிய கடும் காற்றால் தற்காலிக வீடொன்று சேதமடைந்துள்ளது.

வீட்டில் எவரும் இல்லாததால் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் 8 முதல் வாக்காளர் அட்டை விநியோகம்

நாடளாவிய ரீதியில் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதிமுதல் வாக்காளர் அட்டை விநியோகம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ.சி.அமல்ராஜ் மேலும் தெரிவித்ததாவது:-

"எதிர்வரும் செப்ரெம்பர் 2 ஆம் திகதி முதல்வாக்காளர் அட்டைவிநியோகத்துக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு செப்ரெம்பர் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாக வாக்காளர் அட்டை விநியோகம் இடம்பெறும். வாக்காளர் அட்டை விநியோகம் செய்யும் இறுதித் தினமாக செப்ரெம்பர் 14ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் கடமைகளுக்காக சுமார் 8 ஆயிரத்து 232 அரச உத்தியோகத்தர் கடமைகளில் ஈடுபடவுள்ளனர். ஜனாதிபதித் தேர்தல் நீதியானதும் நியாயமானதுமான தேர்தலாக இடம்பெறுவதற்குத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்ற அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் உதவி பிரதேச செயலாளர்களுடன் இணைந்து கிராம அலுவலர்களின் பங்கு அவசியமாகும்" - என்றார். (அ-ச-6-20)

## மனித...

விடுத்துள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

"மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவராகஎவரொருவர் குற்றஞ்சாட்டப்பட்டால் அவர் அரசாங்கத்தின் உயர் பதவியில் நியமிக்கப்படக்கூடாது. இந்த நடைமுறையை இலங்கை அரசாங்கம் இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும். அத்துடன், அரசாங்கத்தின் உயர்பதவிகள், பாதுகாப்புத்துறை, இராஜதந்திரப் பதவிகள் என்பவற்றை வகிக்கும் நபர்கள் மீது மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகத்தன்மைமிக்க குற்றச்சாட்டுகள் வெளியானால், அவர்களை அதிகாரத்திலிருந்து நீக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் அத்தகையவர்களை நியமனம் செய்தலை தவிர்க்கவேண்டும், மேலும் நிலைமாறுகால நீதியை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் அமைப்பில் அவ்வாறான நபர்கள் இடம்பெற்றிருந்தால் அவர்களையும் நீக்கவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், புதிதாகத் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி ஓர் அவசர விடயமாக அனைத்து மக்களையும் அரவணைக்கக்கூடிய தேசியத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அத்தோடு முரண்பாடுகளிற்கான மூல காரணங்களைக் கவனத்தில் எடுத்து ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கும், அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கும், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பனவற்றை மேம்படுத்துவதற்கும் சீர்திருத்தங்களை முன்னெடுக்கவேண்டும்" - என்றுள்ளது. (அ-ம)

## நெல்லியடியில்...

படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்படி எரிபொருள் நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் ஒரு மோட்டார்சைக்கிளில் இரு இளைஞர்கள் சென்றுள்ளனர். ஒருவர் மோட்டார் சைக்கிளால் இறங்கி எரிபொருளைக் கொள்வனவு செய்த நிலையில் மற்றைய இளைஞன் மோட்டார்ச் சைக்கிளுடன் நின்றுள்ளார். போத்தலில் எரிபொருள் நிரப்பி முடித்தவுடன் மோட்டார்ச் சைக்கிளுடன் மதுபோதையில் நின்ற இளைஞன் திடீரென்று எரிபொருள் நிலைய ஊழியர் மீது சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளார்.

இதன்போது, நிரப்பு நிலைய ஊழியரின் கையில் பலத்த வெட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். நெல்லியடிப் பொலிஸாரிடம் முறையிட்ட நிலையில், சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(அ-ம-66-100-27-26-20)

## உள்ளூராட்சித்...

உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்பட்டமையால், நாட்டில் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று தெரிவித்து தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட நால்வர் தாக்கல் செய்த மனுக்களின் மீதான தீர்ப்பு உயர் நீதிமன்றத்தால் நேற்று வழங்கப்பட்டது. இதன்போதே, தேர்தல் பிற்போடப்பட்டமையால் இலங்கையர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டிருக்கவேண்டும். அவை நடத்தப்படாமையால் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன. எனவே முடிந்தளவு விரைவாக உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ம)

## காய்ச்சலால்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். நேற்று அதிகாலை குழந்தை சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## ஜனாதிபதித்...

குறித்துக் கவனம் செலுத்தவில்லை. அரசாங்கம் கடன்பேண்தகு தன்மை குறித்து மாத்திரம் கவனம் செலுத்தக் கூடாது. வர்த்தகத்தின் ஏனைய விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சஜித் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் 2029 ஆம் ஆண்டில் 3.1 பொருளாதார வளர்ச்சி என்பதையே பொதுக்கொள்கையாகக் கொண்டுள்ளன. இது போதுமானதல்ல. 2029 ஆம் ஆண்டுக்கான உலகில் 3.1 வீத பொருளாதார வளர்ச்சி உண்மையில் மந்த நிலையே. ஆதலால், ஐக்கிய மக்கள் சக்தி சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மாற்றியமைக்கும் என்றும் சஜித் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## தேர்தலைப்...

போல மக்களின் வாழ்வுரிமையும் முக்கியமானது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மஹரகம இளைஞர் சேவை மன்றத்தில் நேற்று நடைபெற்ற புதிய மக்கள் முன்னணியின் தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உள்ளூராட்சிசபைத் தேர்தல் பிற்போடப்பட்டமை மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபோதிலும், அந்தத் தருணத்தில் மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கவே பாடுபட்டேன். இதனால் தேர்தலை நடத்த முடியாமற்போனது குறித்துக் கவலை அடையவில்லை.

நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையை மறந்து, அதில் இருந்து நாட்டை மீட்காமல் உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடத்தி இருந்தால் என்ன நடந்திருக்கும்? தேர்தலை நடத்தி இருந்தால் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டிருக்க முடியுமா?

அந்தத் தருணத்தில் எமக்கு ஒவ்வொரு நாளும் முக்கியத்துவமிக்கதாக இருந்தது. எனவே, உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போட்டமை குறித்து எனக்குக் கவலை இல்லை. இந்நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை ஒத்திவைக்கமுடியாது. அது மக்களின் உரிமை. வாக்குரிமைபோல மக்களின் வாழ்வுரிமையையும் நான் மதிக்கின்றேன்" - என்றார். (அ-ம-44)

## 24% ஊதிய...

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் குறைந்தது 24 வீதத்தால் அதிகரிக்கப்படும் எனவும் வாழ்க்கைச் செலவுப் படிகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊதிய முரண்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட நிபுணர்குழு முன்வைத்த பரிந்துரைகளுக்கு அமைச்சரவை, திறைசேரியின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்தே, அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் அரச ஊழியர்கள் மற்றும், ஓய்வூதியர்களின் ஊதியங்களில் வழங்கப்படவுள்ள சலுகைகள் தொடர்பில் சம்பள முரண்பாடுகள் தொடர்பான ஜனாதிபதி நிபுணர் குழுவின் தலைவர் உதய ஆர்.செனவிரத்ன வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 24 வீதம் முதல் 50 வீதம் வரையில் அதிகரிக்கப்படும். அத்துடன், அரச ஊழியர் ஒருவருக்கு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு வாழ்க்கைச் செலவாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. அதுபோல் ஓய்வூதியர்களுக்கும் மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படியாக 12 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படவுள்ளது.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிக்கவேண்டிய தேவை உள்ளது. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அரச சேவை தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கவே இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளாக அரச திறைசேரியை நம்பியிருக்கும் அதேபோன்று, பாரம்பரிய திணைக்கள மாதிரியிலிருந்து விடுபட்டு, நவீனமயப்படுத்தப்பட்ட தொழில் முயற்சியாளர் மாதிரியாக மாற்றி, அனைவருக்கும் பயனளிக்கும் நிறுவனங்களாக இனங்காணப்பட்ட அரச நிறுவனங்களை மாற்றவும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன" - என்றார். (அ-ம-26)

## சிந்துஜாவின்...

பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-56)

## தமிழ்ப்...

தாலும் தனது தனிப்பட்ட ஆதரவு தமிழ்ப் பொதுவேட்பாளரான அரியநேந்திரனுக்கு வழங்கப்படும்" என்று சிறீதரன் தெரிவித்துள்ளார்.

சிறீதரனை அவருடைய இல்லத்தில் வைத்து நேற்றையதினம் அரியநேந்திரன் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே தன்னுடைய நிலைப்பாட்டை சிறீதரன் அறிவித்துள்ளார்.

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக எனது ஆதரவு அரியநேத்திரனுக்கு வழங்கப்படும். தமிழ் மக்கள் காத்திரமான ஒரு செய்தியை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வழங்கவேண்டும்" என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அரியநேந்திரன், "நான் களமிறங்கும் சங்கு சின்னத்தை சிபாரிசு செய்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனே" என்று தெரிவித்தார். (அ-ம-20-26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி வேட்பாளர்கள் சொத்து விவரம் 'ரிலீஸ்'

கொழும்பு, ஓக. 23

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு, ஜனாதிபதி வேட்பாளர்களின் சொத்துப் பிரகடனங்களை, தற்போது அதன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரித்துள்ளது.


ஊழல் தடுப்புச் சட்டத்தின் 89 ஆவது பிரிவின்படி, ஜனாதிபதி வேட்பாளர்கள் தங்களது சொத்து மற்றும் கடன் விவரங்களை வேட்பு மனுக்களுடன் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பித்தனர்.

இந்த அறிக்கைகள் பின்னர் இலஞ்சம் மற்றும் ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டன.

அதன்படி, வேட்பாளர்களுடன் தொடர்புடைய சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளின் திருத்தப்பட்ட பதிப்புகள் இப்போது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன. (ச-இ)


## காணி விற்பனைக்குண்டு

### யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 240 நிலப்பரப்புக்காணி விற்பனைக்குண்டு



- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நன்னீர் ஊற்று - 20 அடி பாதை
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- நுச்சியம்பதி பிள்ளையார் கோவில் அருகாமையில்
- வட்டுக்கோட்டை Jaffna College 1Km தூரம்
- காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான காபெற் வீதி. 500 M, தூரம். 784 வழி அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வழி
- 1 பரப்பின் விலை 150000 / = (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)

➡ பார்வையிடும் நேரம் - காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை.

**குரு : 077 294 1521, 077 288 0152, 076 755 8006,**

(cs.1189) (N-1)


# மறுசீரமைப்பில் கைவைத்தால் இலங்கை பணத்தை இழக்கும்

*ஜனாதிபதி ரணில் பதிலடி*

சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் மறுசீரமைக்கப்படும் என்று சில ஜனாதிபதி வேட்பாளர்கள் தெரிவித்து வருகின்றனர். ஆனால், அவ்வாறு செயற்பட்டால் மறுசீரமைப்பில் இலங்கைக்கு பண இழப்பு ஏற்படும். இலங்கைக்கு வர வேண்டிய பணம் தடைப்படும் என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்குத் தேவையான மாற்றங்களை என்னால் செய்யமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. ஒரு நாடாக முன்னோக்கிச் செல்வதற்கு நிலையான பொருளாதாரம் அவசியம். அதற்காக, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சீன எக்சிம் வங்கி மற்றும் 17 நாடுகளுடன் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்துச் சலுகைகளையும் அரசாங்கம் இதுவரையில் பெற்றுள்ளது.

நாம் தற்போது பொருளாதாரத்தையும் எமது கடன் மறுசீரமைப்பையும் உறுதிப்படுத்தியுள்ளதுடன், எம்மால் கடனைச் செலுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளோம். நாம் பணத்தை அச்சிட மாட்டோம் என்றும், வங்கிகளில் கடன் பெறப்போவதில்லை எனவும் உறுதி அளித்துள்ளோம். எமது வருமானத்திலேயே நாம் தங்கி இருக்கவேண்டும் என்பதே அதன் அர்த்தமாகும். 2026ஆம் ஆண்டாகும்போது அதனை நாம் அடையமுடியும் என்று எதிர்பார்க்கிறேன். 2027ஆம் ஆண்டாகும்போது 5 வீத வருடாந்த வளர்ச்சியைப் பேணுவதே எமது இலக்காகும். இந்த இலக்குகளை அடைவது பொருளாதாரப் பரிமாற்றச் சட்டத்தின்கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் மறுசீரமைக்கப்படும் என்று சில ஜனாதிபதி வேட்பாளர்கள் தெரிவித்து வருகின்றனர். ஆனால், அவ்வாறு செயற்பட்டால் இலங்கைக்கு பண இழப்பு ஏற்படும். இதை மிகத் தெளிவாகக் கூறுகின்றேன் - என்றார். (அ-ம)


## "குழந்தையின்மைக்கு சிறந்த தீர்வு"

# மாபெரும் இலவச கருவளச் சிகிச்சை முகாம்

- நீங்கள் நீண்டகாலமாக குழந்தைப் பேறிற்காக காத்திருக்கும் தம்பதியினரா ?
- நீங்கள் நீண்டகாலமாக அடுத்த குழந்தையை எதிர்பார்த்து காத்திருக்கும் பெற்றோரா ?

**கருவளச் சிகிச்சையில் புகழ்பெற்ற வைத்திய நிபுணர்களை சந்தித்து ஆலோசனை பெறும் அரியவாய்ப்பு உங்கள் அனைவருக்கும் கிடைக்கின்றது.**

- **காலம் : 24.08.2024 சனிக்கிழமை**
- **நேரம் : காலை 9.00 மணி - பிற்பகல் 2.00 மணிவரை**
- **இடம் : இணுவில் - மக்லோட் வைத்தியசாலை**

ஏற்கனவே முற்பதிவு செய்தவர்களுடன் அனைவரும் பங்குபற்றலாம்.
கருவளச் சிகிச்சையானது உங்கள் வசதியைக் கருத்திக்கொண்டு இணுவில் மக்லோட் வைத்தியசாலையில் மட்டுமே நடைபெறுகின்றது.
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது பயன்பெற்றுக்கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**077 121 5005, 077 121 5003, 021 224 1569**
**மக்லோட் வைத்தியசாலை,**
**கே.கே.எஸ். வீதி, இணுவில்.**




கருவளச் சிகிச்சைக்கு வருவதற்கான பாதை வரைபடம்


# ஆட்களில்லாமை கவலையில்லை

*பொன்சேகா தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 23

ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியுள்ள முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நிக்கரவெட்டி யாவில் நடத்திய பரப்புரைக் கூட்டத்தில் ஐம்பதுக்கும் குறைவானோரே கலந்து கொண்டனர்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த சரத் பொன்சேகா, நான் நடத்திய கூட்டத்தில் பெரிய அளவில் மக்கள் கலந்து கொள்ளாதது குறித்து கவலைப்படவில்லை. மற்றைய அரசியல்வாதிகளைப்போன்று பேருந்துகளில் ஆள்களை ஏற்றி இறக்கவில்லை. எனது கூட்டத்துக்கு சமூகமளித்தோர் அனைவரும் எனது உண்மையான ஆதரவாளர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)


## வீடு வாடகைக்கு

49. கண்டி வீதி, கச்சேரிக்கு அருகாமையில் 3 அறைகளும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. வாகன தரிப்பிட வசதியும் உண்டு.

தொடர்புகளுக்கு:-
**077 630 5721**
**0039 340 995 6714**

(CS55993) (1-1)

## வீடு விற்பனைக்கு

கண்டி வீதியில் சென் ஜோன்ஸ் பாடசாலைக்கு அருகில் சகல வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை

தொடர்பு: **077 369 8343**

(cs 1180) (N-1)

## வேலையாட்கள் தேவை

இல. 106 நுணாவில் சந்தியில் இருந்து 2Km தூரத்தில் (பருத்தித்துறை வீதி சாவகச்சேரியில்) அமைந்துள்ள

**ஹொட்டல் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.**

- முகாமையாளர் - 1
- துப்புரவுபணியாளர் - 2
- தோட்டவேலை செய்பவர் - 1

**076 975 5963, 077 620 7641**

## மணமகள் தேவை

யாழ். இந்து (V) கௌரவகுலம் ,1995 ஆம் ஆண்டு பிறந்த, மிருகசீரிஷம் 3ம் பாதம், கிரகபாவம் 23, அரச தொழில் புரியும் மணமகனுக்கு நன்கு படித்த தொழில் புரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: **077 076 1535, 075 825 3480**

(cs 55970) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.